உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫.] ஈசுவர௵ பங்குனி௴ [பகுதி-௫.

Vol. 35 *March—April 1938.* No. 5

கம்பராமாயணசாரம்.

[௩௦௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இலங்கை கேள்விப்படலம்.

இலங்கையின் நிலைமையை (இராமன் கேட்க விபீடணன்) இயம்பியது. நிலைமை, அகழரண் மதிலரண் படையரண் முதலிய காவல்களின் நிலைமை.

'இலங்கை - ஆகுபெயர். இலங்கையளவறிபடலம் என்று சில பிரதியிலும், ஒன்னார் வலியறிபடலம் என்று சிலபிரதியிலும் இந்தப் படலத்துக்குப் பெயர் காணப்படுகின்றன.' வை. மு. கோ.

இராமன் சீதைபிரிந்ததைநினைந்து வருந்தல்.

[விபீடணன் வந்த அன்று சாயங்காலம் இராமன் சந்தியா வந்தனஞ்செய்தபின், சீதைபிரிந்ததைநினைந்து வருந்துவானானான். அந்த வருத்தம் அதிகமாம்படி செந்தீவண்ணமான அந்திவானம் தோன்றியது. அதன்பின், கருங்கடல் கிளர்ந்து எங்கும் பரம்பியது போல இருள், உலகமுழுவதையும் கவர்ந்தது. விண்மீன்கள்மிகுந்து விளங்கிய விசும்பு, பூக்கள் நிறையப் பூத்த பொய்கைபோன்றது. மல்லிகை எங்கும் மலர்ந்த இருண்ட வனம், அந்த நட்சத்திர வானத்தை ஒத்தது. சந்திரன் 'சீதை என்னை வென்றாள். அதற்கு மாறாக, அவள் காதலனை யான் வெல்வே' னென்று *உட்கறுப் புடையனாய் †வாளை வீசிக்கொண்டுவந்தாற்போலத் தோன்றினான்.

---

* உட்கறுப்பு - மனத்திலுள்ள கோபம்; சந்திரனிடத்துள்ள களங்கம்.

† வாள் - (நிலவாகிய) ஒளி; வாளாயுதம்.

*

சந்திரன் உதயமாகவே சமுத்திரம் பொங்கியெழுந்து (இராமன் இருந்த) கரைநோக்கிச் சென்று ஆரவாரித்தல், தன்னை நிறத்தினல் வென்ற இராமன், அந்த வென்றியோடு நின்றிடாமல், வானரசேனையைக்கொண்டு அணைகட்டி அடைக்கவும்வந்தானென்று கோபித்தெழுந்து அவனை எதிர்ந்து உரத்தகுரலோடு போருக்கழைத்தல்போன்றது. தென்றலாகிய புலி, பொதியமலையினின்று புறப்பட்டு, இரவில் மலர்ந்த மல்லிகைமலர்கள், பற்களாகவும் அந்த மலர்களின் செந்தேன் சிவந்த கண்களாகவும் அத்தேனை நாடி ஒன்றன்பின்னென்ருய்த் தொடர்ந்துவரும் வண்டுவரிசைகள் உடம்பின்மேலுள்ள கருங்கோடுகளாகவும் உடம்பு உராய்தலால் ஒலிக்கும் இலைகளின் சலசலப்பு உறுமுதலாகவும் கொண்டு, விரகிகளாகிய இரையைத் தேடி உலாவாநின்றது.

அந்தியும் இருளும் நிலவும் தென்றலும் துணையாக, மன்மதன் சிதைபிரிந்த துன்பத்தை மிகுவிக்க, வருந்திக்கொண்டிருந்த இராமனைச் சுக்கிரீவன் அணுகி, 'நீ இவ்வாறு துன்புறுதலொழிந்து மேல்நடத்தவேண்டிய காரியங்களை விபீடணனுடன் கலந்துபேசி யோசிப்பாயாக' என்ருன். உடனே இராமன் தெளிந்து விபீடணனை அழைப்பித்து 'இலங்கையின் மதில்முதலிய காவலமைப்புக்களையும் அரக்கர்வலிமையையும் சேனையளவையும் தெரிவிப்பாய்' என, அவன் சொல்லுகின்ருன்:

இலங்கையின் அரண்களும் படைகளும்.

இலங்கையின் அகலம் எழுநூறு யோசனை. பூமியும் அதனைச் சூழ்ந்த சக்கரவாளகிரியும்போல இலங்கையும் அதன் மதிலும் இருக்கின்றன*. அம்மதில், சக்கரவாளகிரிபோல ஒன்றன்று; அகமதில் இடைமதில் புறமதிலென மூன்ரும். அம்மதில்களின் வேலைப்

---

* நேமிமால் வரைமதி லாக நீள்புறப்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியும் அயோத்திமா நகரம் போன்றதே. (அரசியற்படலம். எ)

நேமி - சக்கரவாளம். பாமம் - பரப்பு. கடல் - (இங்கே) பெரும்புறக்கடல். கிடங்கு - அகழி. வாமம் - அழகு.

பாடும் அவைகளில் அமைக்கப்பெற்றிருக்கும் (நூற்றுவரைக் கொல்லி முதலிய) இயந்திரங்களின் மேம்பாடும் கண்டறியக்கூடியனவேயன்றி *விண்டறியக்கூடியனவல்ல.

இலங்கைக்கு, அதனைச் சூழ்ந்துள்ள கடலே அகழியாயிருக்கின்றது. அந் நகரின் நான்குவாயில்களினுமுள்ள காவல்வீரர், பலகோடியர். அவர்கள், சிவனையொத்த சேவகர்கள்; எல்லாருயிரையும் உண்ணும் எமனும் எதிர்வானானால் அவனுயிரையும் உண்டுவிடுவார்கள்; எட்டுத் திக்குகளினுமுள்ள யானைகளைக் காலைப்பிடித்துத் தலைக்குமேலாகத் தூக்கித் தரையில் எற்றக்கூடிய வலிமைபடைத்தவர்கள். நான்குதிசைகளன்றி, மேலே விண்ணினின்றும் கீழே பாதாளத்தினின்றும் பகைவர் வருவாராயின், அவரை எதிர்த்தொழித்தற்குச் சித்தமாய்க் காத்துநிற்கும் காவலாளர்தொகை யாவராலும் கணித்தற்கரியது. எல்லாக் காவல் வீரரும், 'இது விடமன்று, கண்' ணென்னும்படி கோபத்தோடு கூடிய கண்ணுடையவர்†; காவல்செய்வார் கண்மூடாது விழித்தபடியே காத்தல் கடனென்னுங் கருத்தினராய், இமைப்பொழுதும் ‡இமைகொட்டாராய்த் தங்கள் தங்கள் காவலைக் கண்ணுங் கருத்துமாய்ச் செய்துவருகின்றார்கள். இராவணன்படை மொத்தம், ஆயிரம்வெள்ளம். அப் படையைச் சேர்ந்த தேர்களும் யானை குதிரை ஒட்டகங்களும் எண்ணிறந்தவை.

படைத்தலைவர்.

'மண்ணுளோரும் விண்ணுளோரும் ஒருநாளுணவுக்கும் பற்றாரென்னும்படியுள்ள அப்பெரும்படைகளின் தலைவர்கள் அகம்பன் நிகும்பன் கும்பன் மகோதரன் முதலியோர். அவர்கள், சிங்கப் பல்லும் நகமுமில்லாத நரசிங்கம்போன்றாரும், "எண்ணிறந்த பிணங்களுக்கு இடுகாடு பலவேண்டா, எமதுவாயொன்றேபோது" மென்று மனிதர் பலரைக் கொன்று வாயிலிடுவோரும் இதுபோன்ற வேறு அபூர்வமான செயல்களைச் செய்வோருமாவர்.'

---

* விண்டு - சொல்லி.

† விடம் அல, விழியெனும் வெகுளிக் கண்ணினர்; வெகுளி - கோபம். (இப்படலம் 25-ம் பாட்டு).

‡ கடன்அல இமைத்தலும் என்னும் காவலர். கடன் - கடமை,

சந்திரன் உதயமாகவே சமுத்திரம் பொங்கியெழுந்து (இராமன் இருந்த) கரைநோக்கிச் சென்று ஆரவாரித்தல், தன்னை நிறத் திறல் வென்ற இராமன், அந்த வென்றியோடு நின்றிடாமல், வானரசேனையைக்கொண்டு அணைகட்டி அடைக்கவும்வந்தா னென்று கோபித்தெழுந்து அவனை எதிர்ந்து உரத்தகுரலோடு போருக்கழைத்தல்போன்றது. தென்றலாகிய புலி, பொதியமலையி னின்று புறப்பட்டு, இரவில் மலர்ந்த மல்லிகைமலர்கள், பற்களாக வும் அந்த மலர்களின் செந்தேன் சிவந்த கண்களாகவும் அத் தேனை நாடி ஒன்றன்பின்னொன்றாய்த் தொடர்ந்துவரும் வண்டு வரிசைகள் உடம்பின்மேலுள்ள கருங்கோடுகளாகவும் உடம்பு உராய்தலால் ஒலிக்கும் இலைகளின் சலசலப்பு உறுமுதலாகவும் கொண்டு, விரகிகளாகிய இரையைத் தேடி உலாவாநின்றது.

அந்தியும் இருளும் நிலவும் தென்றலும் துணையாக, மன்மதன் சீதைபிரிந்த துன்பத்தை மிகுவிக்க, வருந்திக்கொண்டிருந்த இரா மனைச் சுக்கிரீவன் அணுகி, 'நீ இவ்வாறு துன்புறுதலொழிந்து மேல்நடத்தவேண்டிய காரியங்களை விபீடணனுடன் கலந்துபேசி யோசிப்பாயாக' என்றான். உடனே இராமன் தெளிந்து விபீட ணனை அழைப்பித்து 'இலங்கையின் மதில்முதலிய காவலமைப்புக் களையும் அரக்கர்வலிமையையும் சேனையளவையும் தெரிவிப்பாய்' என, அவன் சொல்லுகின்றான்:

இலங்கையின் அரண்களும் படைகளும்.

இலங்கையின் அகலம் ஏழுநூறு யோசனை. பூமியும் அதனைச் சூழ்ந்த சக்கரவாளகிரியும்போல இலங்கையும் அதன் மதிலும் இருக்கின்றன*. அம்மதில், சக்கரவாளகிரிபோல ஒன்றன்று; அக மதில் இடைமதில் புறமதிலென மூன்றும். அம்மதில்களின் வேலைப்

---

* நேமிமால் வரைமதி லாக நீள்புறப்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியும் அயோத்திமா நகரம் போன்றதே. (அரசியற்படலம். எ)

நேமி - சக்கரவாளம். பாமம் - பரப்பு. கடல் - (இங்கே) பெரும்புறக் கடல். கிடங்கு - அகழி. வாமம் - அழகு.

பாடும் அவைகளில் அமைக்கப்பெற்றிருக்கும் (நூற்றுவரைக் கொல்லி முதலிய) இயந்திரங்களின் மேம்பாடும் கண்டறியக்கூடியனவேயன்றி *விண்டறியக்கூடியனவல்ல.

இலங்கைக்கு, அதனைச் சூழ்ந்துள்ள கடலே அகழியாயிருக்கின்றது. அந் நகரின் நான்குவாயில்களிலுமுள்ள காவல்வீரர், பலகோடியர். அவர்கள், சிவனையொத்த சேவகர்கள்; எல்லாருயிரையும் உண்ணும் எமனும் எதிர்வானானால் அவனுயிரையும் உண்டுவிடுவார்கள்; எட்டுத் திக்குகளிலுமுள்ள யானைகளைக் காலைப்பிடித்துத் தலைக்குமேலாகத் தூக்கித் தரையில் எற்றக்கூடிய வலிமைபடைத்தவர்கள். நான்குதிசைகளன்றி, மேலே விண்ணினின்றும் கீழே பாதாளத்தினின்றும் பகைவர் வருவாராயின், அவரை எதிர்த்தொழித்தற்குச் சித்தமாய்க் காத்துநிற்கும் காவலாளர்தொகை யாவராலும் கணித்தற்கரியது. எல்லாக் காவல் வீரரும், 'இது விடமன்று, கண்' ணென்னும்படி கோபத்தோடு கூடிய கண்ணுடையவர்†; காவல்செய்வார் கண்மூடாது விழித்தபடியே காத்தல் கடனென்னுங் கருத்தினராய், இமைப்பொழுதும் ‡இமைகொட்டாராய்த் தங்கள் தங்கள் காவலைக் கண்ணுங் கருத்துமாய்ச் செய்துவருகின்றார்கள். இராவணன்படை மொத்தம், ஆயிரம்வெள்ளம். அப் படையைச் சேர்ந்த தேர்களும் யானை குதிரை ஒட்டகங்களும் எண்ணிறந்தவை.

படைத்தலைவர்.

'மண்ணுளோரும் விண்ணுளோரும் ஒருநாளுணவுக்கும் பற்றாரென்னும்படியுள்ள அப்பெரும்படைகளின் தலைவர்கள் அகம்பன் நிகும்பன் கும்பன் மகோதரன் முதலியோர். அவர்கள், சிங்கப் பல்லும் நகமுமில்லாத நரசிங்கம்போன்றாரும், "எண்ணிறந்த பிணங்களுக்கு இடுகாடு பலவேண்டா, எமதுவாயொன்றேபோது" மென்று மனிதர் பலரைக் கொன்று வாயிலிடுவோரும் இதுபோன்ற வேறு அபூர்வமான செயல்களைச் செய்வோருமாவர்.'

---

* விண்டு - சொல்லி.

† விடம் அல, விழியெனும் வெகுளிக் கண்ணினர்; வெகுளி - கோபம். (இப்படலம் 25-ம் பாட்டு).

‡ கடன்அல இமைத்தலும் என்னும் காவலர். கடன் - கடமை.

இராவணன் தம்பியும் மக்களும்.

'இராவணன்தம்பி கும்பகருணன், மலை மதங்கொண்டு திரிந்தாற்போலச் சஞ்சரிக்கின்ற கரிய பெரிய காத்திரமுடையவன். இராவணனுடைய தலைமகன், தன்னை (இந்திரனை) வென்று சிறைப்படுத்தியபோது கட்டிய கட்டுக்களாலாகிய தழும்புகள் இன்னும் மாறாத கால்களிலும் கைகளிலும் காணப்படுகின்ற இந்திரனைச் செயித்ததனால், 'இந்திரசித்து' எனப் பேர்பெற்ற பெருவீரன். அவன் தம்பி, அவனை ஒப்ப இந்திரனை வெல்ல வல்லவனாயினும், அவ்வாறுசெய்ய வேறோரிந்திரனில்லாதகுறையால்,* 'இந்திரசித்து' என்ற பெயர் பெறாத 'அதிகாயன்' என்ற பெயர்பெற்றவன். தனித்தனி திரிமூர்த்திகளை ஒருசேர வெல்லவல்லரான தேவாந்தகன் நராந்தகனென்பாரும் இராவணகுமாரர்கள்.'

இராவணனது வலிமை.

'இத்தகைய துணைப்பலமுடைய இராவணனது சொந்த வலிமை அபாரமானது. அவன், பெருந்தவஞ்செய்து தன் †பிரபிதாமகனான பிரமனிடத்தும் சிவனிடத்தும் பெற்ற பிரபல வரபலமுடையவன்; வெள்ளிமலையை வேரோடு பிடுங்கி விண்ணளாவ மேலேயெடுத்தவன்; எட்டுத் திசையானைகளும் விசையோடுபாய்ந்து பறிக்கமாட்டாது முறித்த கொம்புவரிசை, வெற்றிச்சின்னமாய் §மதாணிபோல விளங்கும் வலிய மார்புடையவன்; திக்குவிசயஞ்செய்து இயமன் வருணன் குபேரன் முதலிய திக்குப்பாலகரைச் செயித்தவன்.'

அனுமான் வீரச்செயல்கள்.

'அப்படிப்பட்ட இராவணனுடைய ஆளுகைக்குட்பட்ட இலங்கைமாநகரினுள்ளே, யாவராலுங் கடக்கலாகாத காவல்களையெல்லாங் கடந்து புகுந்த அனுமான் செய்துமுடித்த வீரச்செயல்கள் செப்புந்தரத்தனவல்ல. அவனொருவனால் வல்லார் பல்லாரால் அழிக்கக்கூடாத அசோகவனம் அழிந்தது; தேவரையும்

---

* பின்னொ ரிந்திரன் இலாமையிற் பேர்அதி காயன். (இப்படலம் ௫௦.)

† பிரபிதாமகன் - அப்பனைப் பெற்ற பாட்டனுக்குத் தகப்பன்.

§ மதாணி - பெரும்பதக்கம்.

அசுரரையும் செயித்த கிங்கரர் எண்பதினுயிரர் இறந்தனர்; திரளான சேனையொடு சென்றெதிர்ந்த சம்புமாலி சாய்ந்தழிந்தான்; பஞ்சசேனாதிபதிகள் பட்டொழிந்தார்கள்; இராவணன்மகனான அட்சகுமாரன் அரைத்து மசித்துச் செங்குழம்பாக்கப்பட்டுச் செத்தான்.']

27 ஈடு பட்டவ ரெண்ணிலர் தோரணத் தெழுவாற்
பாடு பட்டவர் படுகடன் மணலினும் பலரால்
சூடு பட்டது[1] கோடிநக[2] ரடுபுலி துரந்த
ஆடு பட்டது[3] பட்டன[4] ரனுமனு லரக்கர்.

கொண்டுகூட்டு: 'அனுமானுல், தோரணத்து எழுவால் ஈடுபட்டவர் எண்ணிலர்; பாடுபட்டவர் படுகடல் மணலினும் பலர்; கொடிநகர் சூடு பட்டது; அரக்கர் அடுபுலி துரந்த ஆடு (கள்) பட்டது பட்டனர்.'

பொருள்: 'அனுமானுல் (அசோகவனத்தின் முகப்பிலிருந்து பிடுங்கப்பட்ட) தோரணகம்பத்தால் (அடிக்கப்பட்டு) வலியழிந்தவர் எண்ணிலாதவர்: துன்பமடைந்தவர் கடல்மணலினும் தொகைமிகுந்தவர்: இலங்கை எரியுண்டது: அரக்கர், புலியினுல் துரத்தப்பட்ட ஆடுகள் பட்டபாடு பட்டார்கள்.'

ஈடுபடுதல் - வலியழிதல் (தமிழகராதி). தோரணம் - தோரணவாயில் - அலங்கார வளைவுள்ள வெளிவாசல். எழு - தூண். பாடு - வருத்தம். படுகடல் - முழங்குங் கடல். (படுகண்முரசம். பதிற்றுப். 49. 14. தமிழகராதி.) ஆல் - அசை. சூடு - சுடுதல். அடுபுலி - கொல்லும் புலி. துரந்த - துரத்திய - வெருட்டியோட்டிய. ஆடு, பால்பகா அஃறிணைப் பெயர்; ஆடுகளெனப் பன்மைப்பொருள் தந்துநின்றது.

பாடபேதம்: [1] பட்டவர். [2] தொன்னகர். [3] பட்டதே. [4] பட்டதன்று.

அனுமான் கொளுத்திய தீ, இராவணனைப் படுத்திய பாடு.

['இராவணன், இனி யிங்கே யிருக்கவியலாதென் றெழுந்து, மாற்றுடையெடாது வனைந்த உடையோடு புறப்பட்டு, நாற்புறமும் நணுகவொட்டாது நெருப்பெரிந்ததனுல் விமானமேறி மேல்நோக்கிச்சென்று விண்ணிலேயே எழுநா ளிருந்தானென்றால், இலங்கை எரியுண்ட கடுமையை இயம்புவ தெங்ஙனம்!' என்று கூறினுன் (விபீடணன்.)

இராமன் அநுமானுக்குப் பிரமபதம் அளித்தல்.

இவ்வாறு, தான் தெரிந்துகொள்ளவிரும்பி வினவிய இலங்கை நிலைமையோடு தான் வினவாத இலங்கை நிலைகுலைவு அநுமானால் நேர்ந்ததையும் விபீடணன் கூறக் கேட்ட இராமன், 'வீங்கினார்கள்தோள் வீரரை யார் வியவாதார்!'* என்றவாறு அநுமானது அரிய பராக்கிரமத்தை ஆழ்ந்து நினைந்து அதிசய பரவசனாகி, சீதை பிரிவால் மெலிந்திருந்த தோள்கள் மகிழ்ச்சி மேலீட்டால் விம்மிப் புடைக்க, அநுமானைப் புகழ்வானானான்.]

28 கூட்டி னார்படை பாகத்தின் மேற்படக் கொன்றாய்
ஊட்டி னாயெரி யூர்முற்று மினியங்கொன் றுண்டோ
கேட்ட வாற்றினாற் கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாததென் விற்றொழில் காட்டக்கோல்[1] வீர.

கொண்டுகூட்டு: 'வீர, கூட்டினார்படை பாகத்தின் மேற்படக் கொன்றாய்! ஊர்முற்றும் எரியூட்டினாய்! இனி அங்கு ஒன்று உண்டோ? கேட்ட ஆற்றினால், கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும் (அவளை நீ) மீட்டிலாதது என் வில்(லின்) தொழில் காட்டக்கொல்?'

பொருள்: '("குயவனுக்குப் பலநாள்வேலை, தடிகாரனுக்கு ஒருநாள் வேலை" என்றவாறு, பலநாளாகப் பாடுபட்டுப் படைகளைத்) திரட்டினோர் (ஆகிய பகைவரது) படை(த்திரள்) பாதிக்கதிகமாக (ஒருநாளிலே) பட்டொழியச்செய்திட்டாய்! இலங்கை முழுவதையும் எரிக்கு இரையாக்கினாய். இதன்மேல் (நாங்கள்) அங்கே (போய்ச் செய்யவேண்டியதாக யாதாயினு மொருகாரியமிருக்கின்றதோ! (கழுகரசனான சம்பாதி விண்ணிற் பறந்து நோக்கிச் சீதை இலங்கையிலிருக்கின்றாளென்றுசொல்லியதைக்) கேட்டதுணையாலே (எனவே, கூட்டிக்கொண்டுபோய்க் காட்டுவாருதவியில்லாமல், அரிதுமுயன்று) சீதையை(க் காண)ப் பெற்றும் (நீ அவளை மீட்டுதலை யெதிர்த்துத் தடுக்கவல்லா ரில்லாதிருந்தும்) மீட்டுக்கொணராதது, என் விற்றொழிலைக் காட்டுதற்கு(ச் சந்தர்ப்பமளிக்கும்பொருட்டு)ப்போலும்.'

---

* வாலிவதைப்படலம். கூஎ.

கூட்டல் - தொகுத்தல் - திரட்டல். 'கூட்டினர்' என்பது, அதை அடுத்துக்கூறப்பட்ட 'படை' என்பதனால், படைதிரட்டினரென்று பொருள் கொள்ளநின்றது காண்க. யார் படைகளைக் கூட்டினர்களோ, அவர்களுடைய படைகளென்பது, 'கூட்டினர்படை' எனச் சுருங்கக்கூறப்பட்டது. எவன் தன் காட்டைச் சூழ வேலிவைத்து அடைத்தானோ, அவன் காடும், எவன் தன் மாட்டைப் புல்லுள்ள இடங்களுக்குக் கொண்டுபோய் மேய்த்தானோ, அவன் மாடும், அப்படிச் செய்யப்படாத காடுகளையும் மாடுகளையுங் காட்டிலும் செழிப்பாயிருக்குமென்ற விரிந்தபொருளடங்கிய 'அடைத்தவன்காட்டைப் பார்;' 'மேய்த்தவன்மாட்டைப்பார்,' என உழவர்குழுவில் வழங்கும் பழமொழியில் வரும் 'அடைத்தவன்காடு' 'மேய்த்தவன்மாடு' என்பவைபோல, 'கூட்டினர்படை' யென்பது வந்தது காண்க. 'கூட்டினர்படை' என்பதற்குப் 'பெருந்திரளாகவுள்ளபடை' என்பது முந்திய உரை. பாகம் - பாதி. 'கிட்டி னர்போரக் கிடைக்கின் அன்னவர் - பட்ட நல்வரம் பாகம் எய்துவான்.' (நட்புக்கோட்பலம். 40). 'கேட்டஆற்றினால்' என்பதில், 'ஆறு' என்பது, (எடுத்த காரியத்தை முடித்தற்குத் துணையாயுள்ள) உபாயம் அல்லது வழியென்றபொருள் தந்துநின்றது. 'கேட்டவாற்றினால்' என்பதற்கு '(இப்போது) கேட்ட வகையால்' என்பது முந்திய உரை. கிடைத்தல்-அடைதல், பெறுதல்.

பாடபேதம்: [1] காட்டவோ.

29 நின்செய் தோள்வலி நிரம்பிய[1] விலங்கையை நேர்ந்தோம்[2]
பின்செய் தோஞ்சில வவை[3]யினிப் பீடென்று[4] பெறுமோ[5]
பொன்செய் தோளினாய் போர்ப்பெரும் படையொடும்[6] புக்கோம்
என்செய் தோ[7]மென்று பெரும்புக ழெய்துவா னிருந்தோம்.

கொண்டுகூட்டு: 'பொன்செய்தோளினாய்! போர் (செய்யும்) பெரும் படையொடு (இங்கே) புக்கோம் (ஆகிய நாங்கள்), நின் (போர்) செய்தோள் வலி நிரம்பிய இலங்கையை நேர்ந்தோம்; பின் சில (வீரச்செயல்களைச்) செய்தோம்; அவை, இனி, பீடென்று பெறுமோ? என் (ன சிறந்தசெயல்) செய்தோமென்று பெரும்புகழ் எய்துவான் இருந்தோம்!'

பொருள்: 'பெரிய படையோடு (இந்தக் கடற்கரையை) அடைந்திருக்கின்ற நாங்கள் (இனிக் கடத்தற்கரிய கடலைக் கடந்தோமென்று வைத்துக்கொள்வோம்: கடந்து,) உன் தோள் வலி (யின் புகழ்) நிரம்பிய இலங்கையை எதிர்ந்தோம் (என்றும்,

வைத்துக்கொள்வோம்; எதிர்ந்த) பின்பு சில (வீரச் செயல்களைச்) செய்தோம் (என்றும் வைத்துக்கொள்வோம்: ஆயினும்) அந்த வீரச்செயல்கள், (நீ தனியனாய்ச் செய்த பேராண்மைத் தொழில்கள் செய்யப்படுமுன் செய்யப்பட்டிருந்தால், பெருமையுடையனவாயிருக்கும்; உன் அரியசெயல்கள் நிகழ்ந்திருக்கிற) இப்பொழுது பெருமையுடையனவென்று சொல்லப்பெறாதனவாம். (நாங்கள் இனிச் செய்யக்கூடிய செயல்களைச் செய்துமுடித்தபின்பு, அச் செயல்கள் நின்செயல்களை நோக்க அற்பமேயா மாதலால், நாங்கள்) என்ன (சிறந்த செயல்) செய்தோமென்று பெரும்புகழுடையக்கருதியிருக்கின்றோம்! (நீ தன்னந்தனியனாய்ச் செய்து முடித்த அரிய பெரிய செயல்க ளெங்கே! நாங்கள் பென்னம்பெரிய கூட்டமாய்ச் செய்யவிருக்கிற எளிய சிறிய செயல்களெங்கே!)'

செய் தோள் - (வீரச்செயல் அல்லது போர்) செய்கின்ற தோள்; செய்ய தோள் என்பதன் விகாரமெனினுமாம். நேர்தல் - எதிர்த்தல். இனி - இப்போது. பீடு - பெருமை. பொன் - மேருமலை. 'ஆணிப்பொன் வில்வி' (மீனாட். பிள். 63. தமிழகராதி.) செய், உவமவுருபு. பொன்செய்தோள் - மேருமலைபோன்ற தோள்.

பாடபேதம்: [1] நிரப்பியது, நிரம்பியது. [2] நேர்ந்து. [3] எனில். [4] பீடின்று, பீடொன்று. [5] பெறுமே. [6] படைகொடு. [7] செய்வோமென்றும்.

['நான் செய்த நல்வினையெல்லாந் திரண்டு ஓர் உருக்கொண்டு தோன்றினானே! நீ செய்த பேருதவிக்கு மாறுதவி யில்லை. ஆயினும், உனக்குப் பிரமபதவியை உதவினேன். இந்தப் பிரமகற்பம் முடிந்தபின், நீயே பிரமனாவாய்' என்றான். எனவே, அநுமான், நன்றியுணர்வுடையனாய், அதனைச் சொல்லுதலால் தெரிவியாது தொழுதலால் தெரிவிப்பானாய்ச் சாட்டாங்கமாக வணங்கியெழுந்து, தன் வீரச்செயல்கள் விதந்துகூறப்பட்டதற்கு நாணி, மௌனமாய்நின்றான். எல்லாரும் அவன் வீரப் பிரதாபத்தைக் கேட்ட அளவிலே, வீடுபெற்றார்போல மிகுந்த களிப்படைந்தார்கள்.]

இலங்கைகேள்விப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

பாஸமஹாகவி இயற்றிய

பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்.

[கஉஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இரண்டாவது அங்கம்.

கஞ்சுகி:—(அரங்கிற் புகுந்து) 'காசியரசனுசிரியரான "ஜைவந்தி" இன்று தூதுவந்திருக்கிறுர்; சாமான்யமான தூதர்களை உபசரிப் பதைக்காட்டிலும், அவருக்கு மிகுதியாக வழிபாடுகள்செய்து, அவர் சௌக்கியமாய்த் தங்கியிருக்கும்படி திட்டஞ்செய்வாயாக; அதிதிகளுக்குரிய மரியாதைகள் தமக்குச் செய்யப்படுகின்றன என்று அவர் தெரிந்துகொள்ளும்படி நடந்துகொள்வாயாக' என்று பிரதிஹாரனிடம் சென்று உரைக்கும்படி மஹாசேநர் கட்டளையிடு கிறுர்.

ஓ! இவ்வாறே நற்குலத்திற் பிறந்தோர்களான அரசர்களிட மிருந்து கன்னிகையைக்குறித்துத் தூதர்கள் நாள்தோறும் வரு கிறுர்கள். மகாஸேநரோ ஒருவரையும் மறுப்பதுமில்லை, அநுமதிப் பதுமில்லை; இது என்ன? தெய்வச்செயலின்படியே பெண்ணின் மணம் நடக்கும். ஏனெனில்,

வ்ருத்தம் ந தாவத் ஸ்வயமேவ வேத்தி தஸ்ய
ஈப்ஸிதோ வா ப்ரதித்வேஷிதோ வாபி தஸ்ய:
ததோ நரேந்த்ரஸ்ய குணான் நரேந்த்ரோ
ந வேத்தி ஜானன்னபி தத்வதீக்ஷ: ॥

பெண்குறித்துவந்த தூதனும் அவரிடம் வெளிப்படையாய் அணுகுகிறதில்லை. அரசனும், ஏனையரசர்குணங்களை அறிந்திருந் தும், தூதர்களிடமிருந்தே அவைகளைத் தெரிந்துகொள்ளவிரும் பித் தானுக அவைகளை வெளியிடுவதில்லை.

அடே! அந்தப்புரத்தில் உள்ளவர்களால் இந்த இடம் நிரப்பப் பெற்றிருக்கிறது. அடே! இதோ மஹாஸேநர்!

ஶஷ்பாங்குரஸ்புரிதநீலமணிப்ரரோஹை:
பீதாம்ஶகை: பரிகதை: பரிணீதாம்ஸ: ।
ஆஸன்னநாக கநகதாருவனாந்தராஸ்மாத்
நிர்யாத்யத: ஶரவணாதிவ கார்த்திகேய: ॥

இளம்புற்கள்போல் ஒளிர்கிற நீலமணிகளால் இழைக்கப் பெற்றவையும் சிறந்தவையுமான பொன்வளைகளால் அலங்கரிக்கப் பட்ட தோள்களுடன் சரவணத்திலிருந்து முருகக்கடவுள் தோன் றியதுபோல், நெருங்கிய பொற்பனைக் காட்டிலிருந்து, அவர் இங்கே எழுந்தருளுகிறார். (வெளிச்செலல்)

விஷ்கம்பம்.

அரசன்:—(பரிவாரங்களுடன் அரங்கிற் புகுந்து)

மம ஹயகுரக்ஷுண்ணம் மார்க்கரேணும் நரேந்த்ரா:
மகுடதடவிலக்நம் ப்ருத்யப்ருதா வஹந்தி ।
ந ச மம பரிதோஷோ யந்ந மாம் வத்ஸராஜ:
ப்ரணமதி குணஶாலீ குஞ்ஜரஜ்ஞாநத்ருப்த: ॥

என்னுடைய புரவிகளின் குளம்புகளாற் கிளப்பப்பட்ட தூளி களை அரசர்கள் யாவரும் பணியாளரைப்போல் தங்களுடைய முடி களில் தாங்குகிறார்கள்; அதனால் நான் மகிழ்ச்சியடையவில்லை; (ஏனெனில்) நற்குணங்கள்வாய்ந்தவனும், யானைநூலறிவால் செருக் குடையவனுமான வத்ஸராஜன் என்னை வணங்கவில்லையே! பாதராயண!

கஞ்சுகி:—(அரங்கிற்புகுந்து) மஹாஸேநர் மேன்மையுடன் விளங்கவேண்டும்.

அரசன்:—தூதுவந்த "ஜைவந்தி" நல்ல இடத்தில் அமர்த்தப் பெற்றாரா?

கஞ்சுகி:—ஆம். தகுந்தபடி உபசரிக்கவும்பெற்றார்.

அரசன்:—அரசர்க்கு மரியாதைகளைச்செய்யவிருப்பமுள்ளவ னான உன்னால் சரியான காரியமே செய்யப்பட்டது; நம்மிடம் வந்தவர்களுக்கு மரியாதைசெய்தல் உசிதமே; கன்னியைப்பற்றிக் கேட்டால் எவனும் பிறருடைய அபிப்பிராயப்படியே நிற்கிறான்.

பாதராயண! ஏதோ தெரிவித்துக்கொள்ளவிருப்பமுள்ளவன் போலத் தோன்றுகிறாயே?

கஞ்சுகி:—ஒன்றுமில்லை; கன்னிகையின்விவாகத்தைப்பற்றி யோசிக்கிறேன்.

அரசன்:—மறைக்கவேண்டாம். இந்தநிலைமை எல்லாருக்கும் நிகழக்கூடியதே.

கஞ்சுகி:—மஹாஸேநரே! இவ்வாறு அரசகுலத்தினர் தூதர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் ஒருவரையும் மறுப்பதுமில்லை, அநுக்கிரகிப்பதுமில்லை. இது ஏன்? இதுதான் நான் சொல்லவிரும்பியது.

அரசன்:—பாதராயண! இதுதான்; மணமகனிடம் நிரம்பக் குணங்களை (நான்) விரும்புவதாலும், வாஸவதத்தையிடம் (எனக்குள்ள) அன்பின்மிகுதியாலும் ஒருவிதமான நிச்சயத்தையும் செய்வதற்கு முடியவில்லை.

கு²லம் தாவச்ச்²லாக்⁴யம் ப்ரத²மமபி⁴காங்க்ஷே ஹி மநஸா
 தத꞉ ஸாநுக்ரோஶம் ம்ருது³ரபி கு³ணோ ஹ்யேஷ ப³லவாந்।
ததோ ரூபம் காந்திம் ந க²லு கு³ணத꞉ ஸ்த்ரீஜநப⁴யாத்
 ததோ வீர்யோதா³க்³ரம் ந ஹி ந பரிபால்யா யுவதய꞉॥

முதலில் நல்லகுலத்தையே விரும்புகிறேன்; பிறகு பலத்தை விரும்புகிறேன்; குணம் சற்றுக் குறைவாயிருப்பினும் வலிமையிருக்குமானால் மேலானதே; மடந்தையர்களிடம் அச்சத்தினால் அழகையும் நல்ல தோற்றத்தையும் குணத்தைக்காட்டிலும் மேலாக நினைக்கிறேன்; பிறகு வீரியத்தை எதிர்பார்க்கிறேன்; பெண்டிர்விருப்பப்படி நடத்தலும் வேண்டியதே.

கஞ்சுகி:—(தனக்குள்) மஹாஸேநரிடத்தன்றி வேறு யாரிடத்திலும் இத்தகைய நற்குணங்கள் ஒருங்குசேர்ந்திருப்பதைக் காண்பதரிது.

அரசன்:—ஆதலால் யோசிக்கவேண்டியிருக்கிறது.

𑌕𑌨𑍍𑌯𑌾𑌵𑌰𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑌿𑌤𑍄𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ।
𑌭𑌾𑌗𑍍𑌯𑍇𑌷𑍁 𑌶𑍇𑌷𑌮𑌾𑌯𑌤𑍍𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌨 𑌚𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ॥

கன்னிகைக்கு நல்ல மணாளன் கிடைப்பது பெரும்பாலும் தகப்பனுடைய முயற்சியாலேயே; மற்றவை அவரவர்களின் பாக்கியத்தால் அமைவன. இதற்கு மாறாக இருப்பதை நாம் இதுவரை கண்டதில்லை.

பெண்ணைக் கொடுக்கும்வேளையில் தாய்மார்களுக்கு வருத்தம் உண்டாகும். ஆகையால் தேவியை அழைத்துவருவாயாக.

கஞ்சுகி:—மகாஸேநரின் உத்திரவுப்படி. (வெளிச்செல்லல்)

அரசன்:—(தனக்குள்) காசியரசன் தூதனையனுப்பியதிலிருந்து, வத்ஸராஜனைப் பிணித்துவரச்சென்றவனான ஸாலங்காயனனிடம் என்மனம் சென்றுவிட்டது. அந்தப் பிராமணன் இதுவரை ஏன் செய்தியனுப்பவில்லை ?

தேவி:—(பரிவாரத்துடன் அரங்கிற்புகுந்து) மகாஸேநர் மேன்மையுடன் இருக்கவேண்டும்.

அரசன்:—உட்காருவாயாக.

தேவி:—உத்திரவுப்படி. (உட்காருதல்)

அரசன்:—வாஸவதத்தை எங்கே ?

தேவி:—உத்தரையென்ற "வைதாலி" (பாட்டுக்காரி)யிடம் நாரதரால் இயற்றப்பட்ட முறைப்படி வீணை கற்றுக்கொள்ளச் சென்றாள்.

அரசன்:—காந்தர்வத்தில் (சங்கீதத்தில்) அவளுக்கு ஏன் விருப்பம் உண்டாயிற்று.

தேவி:—ஏதோ ஒருவாறாகக் காஞ்சனமாலையை வீணை வாசிக்கத்தகுந்தவளாகச்செய்வதைப் பார்த்துத் தானும் கற்க விருப்பங்கொண்டாள்.

அரசன்:—இளமைப்பருவத்துக்கு ஒத்ததே.

தேவி:—மகாஸேநரிடம் சில தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

அரசன்:—எதை?

தேவி:—வாஸவதத்தைக்கு ஆசான் ஒருவன் வேண்டும்.

அரசன்:—விவாஹகாலம் நெருங்கியிருக்கும்போது, ஆசான் எதற்கு? அவளுடைய கணவனே அவளுக்குக்கற்றுக்கொடுப்பான்.

தேவி:—ஆ! என் புதல்விக்கு இது (மணக்)காலமா?

அரசன்:—(விவாகஞ்செய்து) கொடுக்கவேண்டுமென்று நம்மிடம் வற்புறுத்திவிட்டு இப்பொழுது ஏன் வருத்தமடைகிறாய்?

தேவி:—மணஞ்செய்துகொடுப்பது எனக்குச் சம்மதமே. ஆனால் அவளைவிட்டுப் பிரிதல் என்னைத் துன்புறுத்துகிறது. அவள் எவனுக்கு வாழ்க்கைப்படுத்தப்பெறுவாள்?

அரசன்:—இன்னும் நிச்சயிக்கவில்லை.

தேவி:—இன்னும் உறுதியாகவில்லையா?

அரசன்:—(தனக்குள்)

அதே3யேதி லஜ்ஜா தே3யேதி வ்யதி2தம் மந: ।
த4ர்மஸ்நேஹாந்தரே ந்யஸ்தா து3:கி2தா: க2லு மாதர: ॥

(மணஞ்செய்து) கொடுக்கப்பெறவில்லையென்றால் வெட்கம்; கொடுக்கப்பட்டாள் என்றால் (பிரிவால்) துக்கம்; அறம் ஒருபுறமும் அன்பு மற்றொருபுறமும் இருக்கும்போது, அன்னைமார்களுக்கு வருத்தம் உண்டாவது இயல்பே.

வாஸவதத்தை எவ்வகையிலும் மாமனாருக்குப் பணிவிடை செய்யக்கூடிய வயதுடையவளாக இருக்கிறாள். காசியரசன் தூதனாகவந்த இந்த ஜைவந்தியோ நன்னடக்கையால் என்மனத்தைக் கவர்கிறான். நீர்ததும்பிய கண்களுடன் இவள் எவ்வாறு நிச்சயிப்பாள்? இருக்கட்டும்; நானே இவளிடம் தெரிவிக்கிறேன். (தேவியைநோக்கி வெளிப்படையாக) நம்முடன் சம்பந்தஞ்செய்துகொள்ளவேண்டுமென்று அரசர்கள் வந்திருக்கிறார்களென்று கேள்விப்படுகிறேன்.

தேவி:—இப்பொழுது வளர்த்துச்சொல்லுவதால் என்ன பயன்? எவ்விடத்தில் (மணஞ்செய்து) கொடுத்தால் நமக்கு வருத்தம் வாராதோ, அவ்விடத்திற் கொடுக்கவேண்டும்.

அரசன்:—உன்னால் துக்கத்தின்மிகுதியோ விளையாட்டுரையி லேயே வெளியிடப்பட்டது; அது, கேட்க மிகவும் துக்கமாயிருக் கிறது. தேவியே! ஒரு முடிவுக்குவரவேண்டும். கேட்பாயாக.

மகதஸ் ஸம்பந்தோ பாதய: காசிராஜோ
வங்க: ஸௌராஷ்ட்ரோ மைதிலஶ் ஶூரஸேந: ।
ஏதே நாநாபோகலோபாபியுக்தா: குணைர்மாம்
கஸ்மிந்நேதேஷாம் பாத்ரதாம் யாதி ராஜா ॥

மகததேயத்தரசனும், காசியரசனும், வங்கதேசத்தரசனும், ஸௌராஷ்டிரவேந்தனும், மிதிலைமன்னனும் சூரஸேநனும் நம் மிடம் முன்னமே சம்பந்தமுள்ளவர்கள்; இவர்கள் பலபடியான குணங்களால் என் மனத்தைக் கவர்கிறார்கள்; இவர்களுக்குள் உனக்கு எவர் தகுதியுள்ளவராகத்தோன்றுகிறார்?

கஞ்சுகி:—(அரங்கிற் புகுந்து) வத்ஸராஜன்

அரசன்:—வத்ஸராஜனா? என்ன?

கஞ்சுகி:—தயவுசெய்யவேண்டும். பிரியமானசொற்களையுரைப்ப தில், அவசரத்தில் மொழிகளின்முறை தவறிவிட்டது.

அரசன்:—பிரியமான வார்த்தையா?

தேவி:—(எழுந்து) மஹாசேநர் வாழவேண்டும்.

அரசன்:—(களிப்புடன்) பிரியமான சொல் தேவிக்கும் உவந்ததே.

தேவி:—மஹாசேநரின் ஆணைப்படி. (இருத்தல்)

அரசன்:—(கஞ்சுகியைநோக்கி) எழுந்திரு, எழுந்திரு. க்ஷாமமற் சொல்.

கஞ்சுகி:—அமைச்சர் ஸாலங்காயனரால் வத்ஸராஜர் பிணிக்கப் பட்டார்.

அரசன்:—நீ என்னசொல்லுகிறாய்?

கஞ்சுகி:—அமைச்சர் ஸாலங்காயனரால் வத்ஸராஜர் பிணிக்கப் பட்டார்.

அரசன்:—உதயனனா?

கஞ்சுகி:—ஆம்.

அரசன்:—சதாநீகன்புதல்வனோ?

கஞ்சுகி:—சரி.

அரசன்:—ஸஹஸ்ராநீகன்பேரன்?

கஞ்சுகி:—அவரே.

அரசன்:—கௌசாம்பிநகரத்துவேந்தனோ?

கஞ்சுகி:—நன்கு அறியப்பெற்றது.

அரசன்:—இசையில் தேர்ச்சிபெற்றவனோ?

கஞ்சுகி:—அவ்வாறே சொல்லுகிறார்கள்.

அரசன்:—வத்ஸராஜன் அல்லனோ?

கஞ்சுகி:—ஆம் வத்ஸராஜரே.

அரசன்:—யௌகந்தராயணன் ஒழிந்தானோ?

கஞ்சுகி:—இல்லை; கௌசாம்பியில்

அரசன்:—அப்படியானால் வத்ஸராஜன் பிணிக்கப்படவில்லையா?

கஞ்சுகி:—மஹாஸேநர் (என் சொல்லை) நம்புக.

அரசன்:—ந ஶ்ரத்³த³தா⁴ம்யுத³யநக்³ரஹணம் த்வயோக்தம்
வ்யாவர்தனம் கரதலைரிவ மந்த³ரஸ்ய ।
யஸ்யாஹவேஷு ரிபவ: கத²யந்தி ஶௌர்யம்
யௌக³ந்த⁴ராயணமதானி ச ந: ஸ்வநந்தி ॥

உதயனன் சிறைப்படுத்தப்பட்டான் என்று உன்னாற்சொல்லப்பட்டதை, கைத்தலங்களால் மந்தரமலையைச் சுழற்றுதலைப்போல் நாம் நம்பவில்லை; போரில் எவனுடைய திறமையைப் பகைவர்களும் புகழ்கிறார்களோ, அந்த யௌகந்தராயணன் ஆலோசனைகள் நமது செவித்தலத்து ஒலிக்கின்றனவே.

கஞ்சுகி:—மஹாஸேநர் பொறுத்தருளவேண்டும். நான் கிழப் பார்ப்பனன் அல்லெனோ? மஹாஸேநரிடம் இதுவரை நான் பொய் உரைத்ததில்லையே.

அரசன்:—ஓ! அது சரியே. ஸாலங்காயனனால் எவன் தூதனாக அனுப்பப்பட்டான்?

கஞ்சுகி:—ஆள் ஒருவனுமில்லை. மிகவும் விரைந்துசெல்லத் தக்க இரதத்தில் வத்ஸராஜனை முன்னிட்டுக்கொண்டு அமைச்சரே வந்திருக்கிறார்.

அரசன்:—அவ்வாறு வந்தாரா? நல்லது; ஓ! நமது படை இளைப்பாறுக. இன்றுமுதல் அரசர்கள் மறைவாகத் தூதர்களை அனுப்புவார்கள். இதுதான் சுருக்கம். நான் இன்றுதான் மஹாஸேநன் (இன்றுதான் எனக்கு அந்தப்பெயர் தகும்); ஐயமில்லை.

தேவி:—அமைச்சரால் கொணரப்பெற்றாரா?

அரசன்:—ஆம்.

தேவி:—ஆகையால் நாம் எவருக்கும் வாஸவதத்தையை (மணஞ்செய்து) கொடுக்கவேண்டாம்.

அரசன்:—(தேவியைநோக்கி) இவன் நம்மால் போரில் வெல்லப் பட்டவனல்லனோ? (கஞ்சுகியைநோக்கி) பாதராயண! ஸாலங்கா யனர் எங்கே?

கஞ்சுகி:—ஆஸ்தாநவாயிலில் இருக்கிறார்.

அரசன்.—"குமாரனுக்குத்தகுந்தவையான உபசாரங்களுடன் வத்ஸராஜனைமுன்னிட்டுக்கொண்டு அமைச்சரையழைத்துவா." என்று பாதரோகனிடம்போய் உரைப்பாயாக.

கஞ்சுகி:—உத்திரவுப்படி.

அரசன்:—இங்கே வா.

கஞ்சுகி:—இதோ வந்துவிட்டேன்.

அரசர்:—வத்ஸராஜனைக் காணவருபவர்களைத் தடுக்கவேண் டாம்.

ஶத்ரூம்வஶ்யங்கதம் பௌரா: ஶ்ரூயதேஜஸம் ஸகௌதுகா: ।
ஸிம்ஹம் தர்ஸிதாவேஷம் யஜ்ஞார்த்தமிவ ஸம்யதம் ॥

வேள்விக்காகக் கட்டப்பட்டு மனத்துச் சீற்றமுள்ளதான சிங்கத்தைப்போல் பிணிக்கப்பட்டவனும், தொழிற்றிறமை யுள்ளவனென்று முன்பே அறியப்பட்டவனும் ஆன பகைவனை நகரமாந்தர் பார்க்கட்டும்.

கஞ்சுகி:—கட்டளைப்படியே. (வெளிச்செலல்.)

தேவி:—இந்த அரசகுலத்தில் பல திருவிழாக்கள் அனுபவிக்கப்பெற்றிருக்கின்றன. மஹாஸேநருக்கு இவ்விதமான சந்தோஷ நிகழ்ச்சி இதுவரை நிகழ்ந்ததாக என் நினைவுக்கு வரவில்லை.

அரசன்:—வத்ஸராஜன் அகப்பட்டான் என்பதுபோன்ற சந்தோஷச்செய்தியை நான் காதால் கேட்டதாகவும் நினைவில்லை.

தேவி:—நம்முடன் சம்பந்தஞ்செய்துகொள்ளவேண்டுமென்று அரசர்கள் பலர் வந்தனர் என்று கேள்விப்படுகிறேன். இவரால் இதுவரை தூதனும் அனுப்பப்படவில்லையே.

அரசன்:—மஹாஸேநன் என்ற பெயரைக்கூட அவன் ஒரு பொருட்டாகக் கருதவில்லையே. சம்பந்தத்தை விரும்புவானா?

தேவி:—பொருட்படுத்தவில்லையா! அவன் சிறுவனா! மூடனா!

அரசன்:—சிறுவனே, ஆனால் முட்டாள் அல்லன்.

தேவி:—இவனுக்கு ஏன் இவ்வளவுசெருக்கு?

அரசன்:—ராஜரிஷிகளையுடைமையால் சிறப்புவாய்ந்ததும் மறையோதியதால் பெருமையுள்ளதுமான பரதவம்சம் இவனைச் செருக்கடையச்செய்கிறது; குலபரம்பரையாய்வந்த காந்தர்வவேதம் (சங்கீதம்) இவனுக்கு இறுமாப்பைக் கொடுக்கிறது; வயதுக்குத் தகுந்த அழகும் இவனைத் தலைசுழலச்செய்கிறது; இவன்மீது எவ்வாறோ உண்டான குடிகளின் அன்பும் இவனை நிலைதடுமாறச் செய்கிறது.

தேவி:—இந்த நற்குணங்கள் மணமகனிடம் இருக்கவேண்டுமென்று விரும்பத்தக்கனவே. எவனுடைய அறிவுக்குறைவால் இந்தக் கெடுதி உண்டாயிற்று?

அரசன்:—காரணமில்லாமல் வியப்புக்கொள்கிறாயே; பார்.

அக்நி: கக்ஷ இவோத்ஸ்ருஷ்டோ தஹது கார்த்ஸ்ந்யேந மேதிநீம் ।

தஸ்ய மே ஶாஸநம் தீப்தம் விஷயாதேவ ஸீததி ॥

புதர்களில் எறியப்பட்ட நெருப்பானது பூமிமுழுவதையும் எரிப்பதுபோல், இன்று என்னுடைய ஆஜ்ஞையானது ஒளியுடைய தாய்க் காரியம் முடிந்தபிறகு அமர்கிறது.

கஞ்சுகி:—(அரங்கிற் புகுந்து) மஹாஸேநர் மேன்மையுடன் இருக்கவேண்டும். உத்திரவின்படி மரியாதைசெய்யப்பெற்று ஸாலங்காயனர் அழைத்துச்செல்லப்பெற்றார். 'பாரதகுலத்தில் நெடுநாட்களாக இருந்ததும், வத்ஸராஜனுடையகுலத்திற் காணத் தகுந்ததுமான இந்தச் சிறந்த வீணையை மஹாஸேநர் பெற்றுக் கொள்ளவேண்டும்,' என்று அவர் (ஸாலங்காயனர்) தெரிவித்துக் கொள்ளுகிறார். (வீணையைக் காண்பித்தல்)

அரசன்:—இதோ ஜயமங்களத்தைப் பெற்றுக்கொள்கிறேன். (வீணையைவாங்கி) இதுவா 'கோஷவதி' என்பது?

ஶ்ருதிஸுகமதுரா ஸ்வபாவரக்தா
கரஜமுகோல்லிகிதாக்ரக்ருஷ்டதந்த்ரீ ।
ருஷிவசநகதேவ மந்த்ரவித்யா
கஜஹ்ருதயாநி பலாத்வஶீகரோதி ॥

இது, செவிகளுக்கு இன்பந்தரக்கூடியதாயும் இனிமையுடைய தாயும் இயல்பிலே மனத்தைக் கவரக்கூடியதாயும் கைவிரல்களின் நுனியால் வருடப்படுகிற நரம்புகளுடன்கூடியதாயும் இருக்கிறது; ருஷிகளின் மந்திரவித்தையைப்போல் யானைகளின் மனங்களைப் பலமாக வசப்படுத்துகிறது.

ஓ! போரில் வெற்றியாற் கிடைத்தவைகளான இரத்தினங் களைத் தமர்களநுபவிப்பதே மனத்துக்கு இன்பத்தையளிக்கும்.

அயம் ஶாஸ்த்ரபராதீநோ ஜ்யேஷ்ட: கோபாலக: ஸுத: ।
காந்தர்வத்வேஷீ வ்யாயாமீ பாலகோ பாலக: ॥

பெரியபுதல்வனான கோபாலகன் அர்த்தசாஸ்திரத்தின் நயங் களைக் கொள்பவன்; அநுபாலகனோ சங்கீதத்தை வெறுப்பவனாயும் தேகப்பயிற்சியில் முயற்சியுள்ளவனாயும் இருக்கிறான்.

தேவி:—ஆம்.

அரசன்:—ஆதலால் இது வாஸவதத்தைக்குக் கொடுக்கப் படட்டும்.

தேவி:—வீணையைக்கொடுத்தால் மறுபடியும் பித்துப்பிடித்த வள்போல் இருப்பாள்.

அரசன்:—விளையாடட்டும், விளையாடட்டும்; மாமனார் இல்லத்தில் இது (விளையாட்டுக்) கிடையாது.

கஞ்சுகி:—(அரசனைநோக்கி) அமைச்சருடன் உள்ளேசென்றார்.

அரசன்:—வத்ஸராஜனா ?

கஞ்சுகி:-ஆம். அவர், மிகவும் விநயமுள்ளவராதலாலும், கால்களிலும் மேனியிலும் அடிகள் அதிகமாய் விழுந்திருப்பதாலும், தோள்களால் தாங்கக்கூடிய படுக்கையில் ஏற்றி, வீட்டுக்குள் எடுத்துச்செல்லப்பட்டார்.

அரசன்:-ஆ! சீ! இது ஒருவருக்கும் அடங்காத வீரியத்தின் குற்றமே. இச்சமயத்தில் அவனைத் தக்கபடி கவனிக்காதவன் கொடியவனே. பாதராயண! பாதரோகனிடம் இவனுடையபுண்களுக்கு மருந்துகட்டச்சொல்லுவாயாக.

கஞ்சுகி:—உத்திரவுப்படி.

அரசன்:—அல்லது இவ்விதம் உரைப்பாயாக.

கஞ்சுகி:—இதோ இருக்கிறேன்.

அரசன்:—அவனை நன்றாய்க் கவனித்துக்கொள்ளவேண்டும். அவனுக்கு வேண்டுவதை (அவனுடைய) குறிப்பைக்கொண்டே அறியவேண்டும்; போரைப்பற்றின செய்திகளை அவனிடம் உரைக்கக்கூடாது; ரணங்களுக்கு மருந்துகட்டும்போது நல்வார்த்தைகளால் அவனுக்கு ஆசிகூறவேண்டும்; சமயத்துக்குத் தக்கபடி அவனைத் துதிசெய்து பூசித்தல்வேண்டும்.

கஞ்சுகி:-மஹாஸேநரின் ஆணைப்படி. (வெளியேசென்று மறுபடியும் அரங்கிற்புகுந்து) மஹாஸேநர் மேன்மையுடன் விளங்கவேண்டும். வரும்வழியிலேயே வத்ஸராஜரின் ரணங்களுக்கு மருந்து கட்டியாய் விட்டது. மறுபடியும் மருந்துகட்டுவது உசிதமில்லை. சூரியன் வானத்தின் உச்சிக்கு வந்துவிட்டான்.

அரசன்:—வீரனும் மானமுள்ளவனுமான அவன் எவ்விடத்தில் இருக்கிறான் ?

கஞ்சுகி:—மயில்கள் நிற்பதற்காகக் கோல்கள் கட்டியிருக்கிற இடத்தில்.

அரசன்:—சி! அந்த இடம் தங்கியிருக்கத் தகுந்ததன்று. "வெய்யில் படாதபடி மணிகள் இழைத்த திண்ணையில் இருக்கட்டும்" என்று சொல்லுவாயாக.

கஞ்சுகி:—கட்டளைப்படி. (வெளியேசென்று மறுபடியும் அரங்கிற் புகுந்து) கட்டளைப்படி எல்லாம் செய்தாகிவிட்டது. பாதரோகரென்ற அமைச்சர் தங்களைக் காணவிரும்புகிறார்.

அரசன்:—வத்ஸராஜனுக்கு மரியாதைசெய்தலை அவர் விரும்பவில்லையென்று தோன்றுகிறது. நீதிசாஸ்திரத்தை மிகமிகக்கற்றதால் அவர் இவ்வாறு நினைக்கிறார்போலும். நானே இவனை (வத்ஸராஜனை) ஸமாதானப்படுத்துகிறேன்.

தேவி:—சம்பந்தம் நிச்சயமாகிவிட்டதா?

அரசன்:—இல்லை, இனிமேல் நிச்சயிக்கப்படும்.

தேவி:—அவசரப்படவேண்டாம்; என் புதல்வி குழந்தையே.

அரசன்:—உன்விருப்பப்படியே நடக்கட்டும்; உள்ளேசெல்.

தேவி:—மஹாராஜர் எவ்விதம் ஆணையிடுகிறாரோ, அவ்விதமே செய்வேன். (பரிவாரத்துடன் செல்லுதல்.)

அரசன்:—(ஆலோசித்து,)

[illegible]
[illegible]।
[illegible]
[illegible]॥

இவனுடைய செருக்கினால் முதலிற் பகை ஏற்பட்டது; இவன் இங்கே கொணரப்பட்டபோது என்னாற் கொல்லத்தகுந்தவனே; ஆனாலும், இவன் போரில் வருந்தி வாட்டமடைந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டபிறகு ஏதேதையோ மனத்தில் நினைக்கிறேனே! (வெளியே செல்லல்.)

இரண்டாவது அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(௮௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

உள்நாட்டு நிகழ்ச்சிகள்.

கி. மு. 267-ல் பொருட்கணக்கர் (Quaestors) நால்வர் தெரிந்தெடுக்கப்பட்டனர். பொருட்கணக்கர்தொழில் படைக்குக் கூலி கொடுத்தலும் அரசிறைகளைத் தொகுத்தலும் போரிற் சேவித்தலும் என்பர். முறைவேண்டினர்க்கும் குறைவேண்டினர்க்கும் நீதி செலுத்தற்குத் துணைத்தலைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். துணைத்தலைவர் நகரத்தலைவராகவும் நாட்டுத்தலைவராகவும் சேவித்தனர். இத்துணைத்தலைவர்களைப் படைவீரர்சபை தெரிந்தெடுத்தது. படைவீரர்சபை பழையமுறைப்படி குதிரைப்படையிற் பதினெட்டு வகுப்பும், முதற்பிரிவில் 80 வகுப்பும், இரண்டு மூன்று நான்கு ஐந்து பிரிவுகளில் 90 வகுப்புக்களும், பாணர் கூத்தர் யந்திரஞ் செலுத்துவோர் பாகர் முதலியோருடைய வகுப்பு ஐந்துமாக 193 வகுப்புக்களையுடையது. மேற்கூறிய வகுப்புக்களுக்கு அங்கத்தினராவோர் அளவுபட்ட பொருளுடையராக இருத்தல்வேண்டும். இச்சபையினரைத் தெரிந்தெடுக்கும்முறை கி. மு. 240-ல் திருத்தப்பட்டது. 35 சாதியினரான உரோமருள் ஒவ்வொரு சாதியையும் ஐந்து ஐந்து வகுப்பாக்கி ஒவ்வொருவகுப்பையும் இளைஞர் வயோதிகரென இருபிரிவாக்கி 350 வகுப்புக்களை அரசாங்கத்தார் நூதனமாக ஏற்படுத்தினர். 18 வகுப்புக்களாலாகிய குதிரைப்படை இப்பிரிவுகளுக்குப் புறம்பாயிற்று. பாணர் முரசினர் பாகர் முதலியோர் ஐந்துவகுப்பினராகவே பிரிக்கப்பட்டனர். இங்ஙனம் பொதுமக்கள் 373 வகுப்பினராயினர். பழையமுறையின்படி 193 வகுப்பில் 98 வகுப்பு மேன்மக்களுக்கிருந்தது. புதியமுறையின்படி 373 வகுப்பில் 88 மேன்மக்களுக்காகும். இவ்வண்ணம்

கீழ்மக்களின் உரிமை பெருகியது. இவ்வகுப்பு ஒவ்வொன்றும் தாம் விரும்பிய தலைவர்களைத் தெரிந்தெடுக்கும். அங்ஙனம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோரில் எவன் பெரும்பான்மையான வகுப்புக்களால் தெரிந்தெடுக்கப்படுகிறானோ அவனே தெரிந்தெடுக்கப்பட்டவனாவான்.

கல்லியர்போர்.

கி. மு. 322ல் பிளாமினியஸ் என்பான் கல்லியநாடுகள் சிலவற்றைக் கீழ்மக்களுக்கு அளிக்கவேண்டுமெனப் பிரேரித்தான். மேன்மக்கட்சபை பிரேரணையை எதிர்த்தது. படைவீரர்சபை பிரேரணையை அங்கீகரித்தது. கி. மு. 225ல் போயி என்னும் கல்லியர் போர்க்கெழுந்தனர். அல்புமலைக் கல்லியரும் லிங்கோனியரும் வெனீசியரும் துணையாயினர்கள். உரோமர் மிகவும் அஞ்சிச் சமயக்கணக்கரிடம் நிமித்தங்கேட்டனர். அவர்கள் சாந்திகளை மொழிந்தனர். சாந்தியாக இரு கல்லியரையும் இரு கிரேக்கரையும் கடைவீதியில் உயிரோடு புதைத்தனர். கல்லியர் உரோமருடைய காவற்குடியேற்ற நகரங்களைக் கடந்து குளுசியத்தைக் கிட்டினர். குளுசியத்தில் உரோமர்படையிரண்டனிடையில் அகப்பட்டுக் கல்லியர்படை நாசமாயிற்று. அப்போர்க்களம் தேலாமன் எனப்படும். அப்போரில் 40,000 வீரர் மாண்டார்கள். கி. மு. 223-ல் பிளாமினியஸ் என்பான் போநதியைக் கடந்து போர்புரிய எண்ணினான். பிரயாணத்திற்குப் பார்த்தசகுனம் பொருந்தாததென மொழியப்பட்டது. பல உற்பாதங்களும் நிகழ்ந்தன. பிற்கேனத்தில் ஒரு ஆறு இரத்தமாய் ஓடியதெனவும், எற்றூறிபாவில் வான் தீப்பற்றி எரிந்ததெனவும், வேறோரிடத்தில் மூன்று திங்கள் தோன்றினவெனவும் கூறப்பட்டுளது. பிளாமினியஸ் என்னும் தலைவனை நிமித்திகர் தடுக்கவும் அவன் கல்லியநாடுசென்று வெற்றியோடு திரும்பினான். கீழ்மக்கட்கட்சியினனாகிய பிளாமினியஸ் தலைவனாயிருத்தலை மேன்மக்கள் விரும்பாமையால் நிமித்தம் பொருந்தாததென மொழிந்திருக்கக்கூடும். கி. மு. 222ல் கல்லியர் விரிடோமாறஸ் என்னும் தலைவனோடு

போநதியைக் கடந்தனர். மாக்கேலஸ் என்பான் இவ்வீரனோடு தனிப்போர்செய்து வென்றானகையால் ஊர்வலம்பெற்றான். மேன் மக்கள் அவனை மிகவும் பாராட்டினார்கள்.

இலிறியர் போர்.

ஹத்திரியாடிக்கடலிற் கடற்கள்வரும் ஆறலைப்போரும் மிகுந்தமையால் உரோமர் கீழ்கரையைக் காத்தற்குத் தெற்கே பிரண்டுசியம் முதலாக வடக்கே கத்திரியா ஈறாக உள்ள இடங்களிற் காவல் நகரங்களை அமைத்தனர். கி. மு. 230-ஆம் ஆண்டு இசாத்தீவார் ஆறலைக்கப்பட்டுவருந்தி உரோமரிடம் முறையிட்டனர். உரோமர் சகோதரர்களாகிய கொறுங்கர் இருவரைக் கள்வர்நாடாகிய இலிறியாதேசத்திற்குத் தூதராக அனுப்பினார்கள். அங்கே அரசுபுரிந்திருந்த அரசி இரேயுற்று என்பவள் சூறைகொள்ளுதலும் ஆறலைத்தலுமே தம் தொழிலெனக்கூறித் தூதரில் ஒருவன் தம்மை நாவினாற் சுட்ட வடுவுக்கு ஆற்றாளாகிக் கொறுங்கன் ஒருவனைக் கொல்வித்தாள். அதனால் வெகுண்ட உரோமர் படையொடுசெல்ல அரசி சமாதானம் வேண்டினாள். பின்பு 219-ஆம் ஆண்டிலும் இலிறியர் போர்செய்யத்தொடங்கினர். உரோமர் தலைவன் அமீலியஸ் போலஸ் என்பான் அவர்களை அடக்கி இலிறியநாட்டை ஆட்சிநாடாக்கினான்.

[தொடரும்.]

ஸ்ரீ:

மதிப்புரை.

அழகர் கிள்ளைவிடுதூது:—இது, பாண்டிநாட்டுத் திருமால் திருப்பதிகளுட்சிறந்த திருமாலிருஞ்சோலைமலையழகர்மீது காதன்மிக்காளொருதலைவி தன் ஆற்றாமையெல்லாம் அழகரிடமுரைத்து அவர் திருத்தோளிலணிந்த மாலையினைவாங்கிவருமாறு கிளியைத் தூதுவிடுவதாகப்பலபட்டடைச்சொக்கநாதப்புலவராற்பலவகைநலனும் அமைய இயற்றப்பட்டதொரு பிரபந்தம். இது, பலவருடங்களுக்கு முன் மூலமாகமட்டும் அச்சிடப்பட்டிருந்ததெனினும், அப்பதிப்பினால் இந்நூல்பற்றி அறியவேண்டும் பொருள்பலவும் நன்கு விளங்காத குறை தீர இப்பொழுது மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் ஸ்ரீமத். உ. வே. சாமிநாதையரவர்களால் குறிப்புரையும் நூலாராய்ச்சிமுதலிய பல அரிய விளக்கவுரைகளும் உடையதாக அழகுற அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கிறது. இப்பதிப்பின் சிறப்பெல்லாம் விரிக்கிற் பெருகும்.

[இதன் விலை அணா ஆறு. கிடைக்குமிடம்:–தியாகராஜவிலாசம், திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.]

இப்பிரபந்தத்தினுட்பொருளெல்லாம் தமிழ்மக்கள் இனிதுணருமாறு ஐயரவர்களால் இதனை வெளியிடுவித்த வடபாதிமங்கலம் ஸ்ரீமான் வ. சோ. தியாகராஜமுதலியாரவர்கள் தமிழ்ப்பற்றும் பரோபகாரசீலமும் பாராட்டத்தக்கன.

ஏனைய செல்வர்களும், இவ்வாறு ஐயரவர்கள் ஆராய்ந்து செப்பஞ்செய்துவைத்திருக்கும் தமிழ்நூல்கள் பலவும் வெளிவருவதற்கு விரைந்துதவுவார்களென்று நம்புகிறோம்.

ஐயரவர்கள் இத்தகைய பல நூற்பதிப்புக்களால் தமிழை வளர்த்துப் பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவன் அருள்புரிக.

நிர்மலகுப்தர்—உங்கள்தேசத்தில் என்ன விசேஷம்?

சித்திரன்:—இந்தமாதிரியாய்த் திருடர்முதலானோர் எங்கள் தேசத்தில் உண்டா? எந்த வழியில் எப்பொழுதுவேண்டுமானாலும் சிறுகுழந்தைகூட நிர்ப்பயமாய்ப் போகலாம். எங்களரசர் பிரஜைகளுக்கு இந்த விருத்தியே தெரியாது.

நிர்மலகுப்தர்:—இந்தராஜ்யம் அதற்குமேல் இருந்ததாக்கும். இப்பொழுது சொற்பகாலமாய்த்தான் ராஜரீகத்தின் கெடுதலால் இவ்விதம் ஆய்விட்டது.

சித்திரன்:—அது முந்தின சங்கதியல்லவா? இப்பொழுது அப்படியிருக்கும் ராஜ்யத்தைப் பார்த்துவிட்டுவரலாம் வாருங்களேன்.

நிர்மலகுப்தர்:—அதென்ன ஆச்சரியம்? சிலவருஷங்களுக்கு முன் இங்கேயிருந்ததுபோலத் திருடர்களைப் பிடிக்கவும் தண்டிக்கவும் சொத்துக்களை வாங்கி ராஜாங்கத்துக்கனுப்பவும் கிராமப்பஞ்சாயத்தாருக்கும் நாட்டுத்தலைவர்களுக்கும் அதிகாரம் இருந்தால் திருட்டேன் நடக்கிறது? அதைப்பார்க்க அவ்வளவுதூரம் வரவேண்டியதில்லை. இந்த அரசன் தன்னைச் சூழ்ந்துகொண்டு தனக்கு இழிதொழில்கள்செய்யும் கவைக்குதவாதவர்களுக்கெல்லாம் பெரியபதவிகளைக் கொடுத்திருப்பதனாலல்லவா ராஜ்யம் இப்படிக் கெட்டுப்போயிருக்கிறது?

உத்தரன்:—அதைப்பற்றி எங்களுக்காகவேண்டியதில்லை. நாங்கள் இந்தத்தேசமா? நீங்கள் எங்களோடு வாருங்கள். போவோம்.

நிர்மலகுப்தர்:—(*தனக்குள்*) சந்திரனைப் பார்த்துவிட்டுவருவோம். (உத்தரனைநோக்கி வெளிப்படையாய்) அப்படியே செய்வோம்.

[எல்லோரும் போதல்.]

அங்கம் - V.

களம் - 1.

இடம்:—தக்ஷசைலத்திற் புருஷோத்தமன் அரண்மனையில் கொலுவிருக்கைமண்டபம்.

பாத்திரங்கள்:—சத்ருஜித், சந்திரன், பிரபுக்கள், சேவகர்கள் முதலியோர்.

[புருஷோத்தமன் பிரவேசிக்க எல்லாரும் எழுந்து தொழுதல்.]

அந்தணர்:–[*பஞ்சாதி சொல்லி அக்ஷதை தூவல்.]

புருஷோத்தமன்:—[வணங்கி அதைத் தலையிலேந்திச் சிங்காஸநமேறி வீற்றிருந்து] மந்திரப்பெரியாரே! உங்கள் மறையருண் மலிய நம் கவலைகளெல்லாம் ஒழிந்து அவைகளைக் கைதுடைத்துவந்தோம்.

அந்தணர்பெருமான்:—அரசே! நீதிநெறிவழாத தங்களுக்கு எப்பொழுதும் யாதொருகுறையும் வாராது. ப்ரஜைகளாகிய எங்கள் குற்றங்களிற் பாகமுடையார் அரசராதலின் அவைகள் சிறிது இடர்ப்படுத்தலாம். குடிகளிடம் குற்றங்கடிந்து அவர்களையும் நல்லொழுக்கமுடையராகச்செய்து காத்தல், அரசர் தம்நலங்கருதியேனும் செய்யவேண்டிய கடமையென்று பெரியோர் கூறுவர். மேல்நாட்டுமன்னர் மிகுபடையோடேறிச் சிறிது நம் நாட்டையொறுத்ததும் நமக்கு நன்மையே பயந்துளது.

புருஷோத்தமன்:—[சத்ருஜித்தைநோக்கி] வீரர்சிங்கமே! இனி நம் நாடு அமைதியடைந்து அருள்பெற்றுவாழுமன்றோ?

சத்ருஜித்:—ஆம். மன்னர்பெருமானே! மகதநாட்டின் மன்னர் செருக்குக் கணிகலமாகி நேபாளஞ்செகுத்து நிலைநின்ற கீர்த்தியினராகிய நிர்மலகுப்தர் தம் சேடராகிய சந்திரரைப் பார்க்கவந்தார். தங்கள் தரிசனத்துக்குக் காத்திருக்கிறார்.

---

* பஞ்சாதி எழுதாக்கிளவியாதலின் இங்கே வரையப்பெற்றிலது. அந்தணர் அரசராசியாயுள்ளதைச் சொல்லக்கடவர்.

புருஷோத்தமன்:—அழையுங்கள்.

[நிர்மலகுப்தர் வந்து புருஷோத்தமனை வணங்கச் சந்திரன் நிர்மலகுப்தரை வணங்குதல்.]

புருஷோத்தமன்:—குப்தர்சிகாமணியே! நீர் இன்றுதான் இவண்வரினும், உம்முடைய கீர்த்தியும் சீர்த்தியும் வெகுகாலத்துக்குமுன்னமே இந்நாட்டிற் பரவியுள்ளன. உம்மைப்போன்ற பெருந்தகையாளர் வரவால் இந்நாடு பெரும்பேறுடையதாயிற்று. நீரும் மற்ற வீரசிகாமணிகளும் நிறைந்து காக்கும் மகதத்தை நினைத்ததும் அலக்ஷியேந்திரனும் திகைத்தேகினனன்றோ.

நிர்மலகுப்தர்:—அரசர்பெருமானே! என்றும் நின்றுநிலவும் ஒளியுடைக்கதிரவனையும் ஒருசிறிதுபொழுது மேகமும் நிழலும் மறைக்கவில்லையா? அதனால் அவனொளி மழுங்குவதும் இல்லை. எவ்விதத்தினும் பாதிக்கப்படுவதும் இல்லை. ஆனால் அதன்பயனை நுகர்வார்க்குமட்டில் சிறிது தடை உண்டு. நற்காலம் வந்தவாறே அத்தடைநீங்கி அவர் நலனுகர்வர். தங்களைப்போன்ற அரசர்பெருமக்களின் ஆட்சியாகிய செல்வமும் குடிகளுக்கு அவ்வண்ணமே அமைந்துளது. அவர்கள் பாக்கியக்குறையால் சிறிதுகாலம் கவலை நேர்ந்தது. எல்லோருக்கும் நற்காலம் பிறக்க அது ஒழிந்தது.

புருஷோத்தமன்:—உம்முடைய சீடனாகிய சந்திரனும் உதித்துத்தான் அவ்விருள் விலகிற்று.

சத்ருஜித்:—அவர்களுடையநாட்டிலும் ஏதோ கோல்கோடி இருள் பரந்திருக்கிறதாம். சந்திரன் மறுபடி அங்கு உதயமாக வேண்டுமாம். அழைத்துச்செல்ல வந்திருக்கிறார்.

புருஷோத்தமன்:—நம்நாட்டில் உண்டான பரபரப்புக்கள் நீங்கி அமைதிமுற்றும்வரை யார்தான் எவ்விதம் அவரவர் ஸ்தானத்தை விடமுடியும்?

நிர்மலகுப்தர்:—அரசர்சிங்கமே! இந்நாட்டில் எப்பொழுதும் பரபரப்பே யிருக்க நியாயமில்லையே. அடுத்துக் கொடும்போர்நடக்க அதை நாடகமெனக் கண்டுகொண்டு உழவர் வயலில் தொழில் நடத்திவருகின்றநாடன்றோ இது! இங்கே நீதியும் தருமமும் நெறி தவறாதுநடக்கின்றனவே. பாதியுலகை வென்று வந்த மேல்நாட்டு மன்னனும் இம்மண்ணை மிதித்ததும் கர்வமடங்கியும் ஆசை யொடுங்கியும் நன்மனமுடையவனாகித் தன்தேசம்நோக்கித் திரும்பி னான். இங்குள்ள பெரியார் ஸந்நிதானமும் அவன்மனத்தையும் செய்கையையும் தூய்மையடையச்செய்தது. ஸத்யமும் தர்மமும் யாரால் எவ்வளவு அலைக்கப்படினும் தம் நிலை கெடா. அவைகட்குத் தீங்கிழைக்கப்புறப்படுவனவெல்லாம் தம் தீமையினால் தம்மைத் தாமே கொன்று சாவன. எப்பொழுதும் ஒன்றுபோலிருத்தல் அவைகளின் முக்கியத்தன்மையாகும். அவை இந்நாட்டில் மலிந்து கிடத்தலின் அவைகளையுடைய தங்களையும் தங்கள் நாட்டையும் யாரும் அசைக்கமுடியவில்லை. எங்கள் நாட்டில் அம்மரபு சிறிது காலமாகத் தவறிக்கிடக்கிறது. அதை ஒழுங்குபடுத்தப் புருஷோத்தமனருள் வேண்டுகிறோம்.

புருஷோத்தமன்:—மந்திரீ! இதுவிஷயத்தில் நாம் ஏதேனும் செய்யத்தகுந்ததுண்டோ?

மந்திரி:—ஆம் அரசே! அடுத்துள்ள நாடுகளில் அறம் செவ்வனே நடந்துவரவேண்டியது நம் நாட்டுக்கும் மிகவும் முக்கியமானது. அண்டைநாட்டில் அறம் தவறினால் நம்முடைய பிரஜைகளுக்கும் நலிவுகள் வரும். ஆதலின் இவர்களுக்கு வேண்டிய உதவிசெய்ய நாமும் கடப்பட்டுள்ளோம்.

புருஷோத்தமன்:—சேனைத்தலைவரே! நாம் செய்யத்தக்க உதவி என்ன?

சத்ருஜித்:—மன்னவரே! சந்திரனும் அவன்கீழுள்ள படைகளும் நம்நாடு கடந்து மகதநாட்டுக்கு வரவேண்டுமாம். அங்குள்ள

சகல சிற்றரசர்களும் திசைகாவலர்களும் அவர்களை நன்கு வரவேற்றுத் தலைநகருக்கு அழைத்துப்போவார்களாம். சில கையாள்களைத் தவிர மற்று யாரும் அரசன்பக்கத்தில் இல்லையாம். எத்தகைய போரும் நடவாமல் அரசுபடியுமென்று சொல்லுகிறார்கள்.

புருஷோத்தமன்:—நம் சேனையில் எந்தப்பாகமும் நம்நாட்டெல்லைகடந்து பிறநாடு புகுந்தால் அது யுத்தத்தொடக்கமாகுமன்றோ?

சத்ருஜித்:—அவ்வாறு எண்ணவே இடமில்லாமல் நிர்மலகுப்தர் ஏற்பாடுசெய்திருக்கிறார். அவர் முன்னால்போய்த் திசைகாவல் தளகர்த்தரோடிணங்கி அவர்கள் அரசகுமாரர் சந்திரர் தங்கள் நாட்டில் சீரும் சிறப்பும் பெற்றுவருவதால் அவருக்கு எல்லைப் புறத்தில் வரவேற்புவிழா நடத்த ஏற்பாடு செய்துவைப்பார்; அவ்வாறு அவர்கள் வரவேற்கப் படை ஒரு அங்கமாகக்கொண்டு சந்திரன் செல்வான்; மேலுள்ளவற்றை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

நிர்மலகுப்தர்:—தங்கள் படைத்தலைவராகிய சத்ருஜித்தும் அவருடைய படையங்கத்தோடு எங்களுடன் வரவேண்டுமென்று கோரியுள்ளோம். சமுகம் உத்தரவை எல்லோரும் எதிர்பார்க்கிறோம்.

புருஷோத்தமன்:—அவ்விதமானால் இவர்கள் என்ன யுக்தி செய்தாலும் இது நிச்சயமாக யுத்தமென்றுதானே கருதப்படும்?

நிர்மலகுப்தர்:—மகாராஜரே! அங்குள்ளவர்களெல்லாரும் நம் கட்சியினர். ஆதலின் எவ்வகைப்போர்க்கும் இடமில்லை.

மந்திரி:—ஒருக்கால் நேர்ந்தபோதிலும் இந்த மூன்று சிம்மங்களும் சேர்ந்தவிடத்து வானுளோரும் மண்ணுளோரும் முற்றும் திரண்டுவந்தாலும் வெற்றி இவர்கள்பக்கந்தான் அரசே!

புருஷோத்தமன்:—அப்படியாயின் நல்லது. போய்வாருங்கள்.

சந்திரன்:—[வணங்கிநிற்றல்.]

புருஷோத்தமன்:—சந்திரரே! நம்நாட்டுப் படையை உமக்குப் பரிசாகக் கொடுத்தோம். அதை என்றும் நன்கு பரிபாலித்துப் பேரும் பெருமையும் உடையதாகச்செய்ம்மின்!

நிர்மலகுப்தர்:—[வணங்கிநிற்றல்.]

புருஷோத்தமன்:—குப்தரே! உங்கள்நாடு அறம்முற்றி நீதி முறையில் நிற்க ஆண்டவன் அருள்புரிவான்.

சத்ருஜித்:—[வணங்கிநிற்றல்.]

புருஷோத்தமன்:—சேனைத்தலைவரே! ஐந்து புண்ணியநதிகளின் புனல்வளமுள்ள இந்நாட்டிற் பிறந்து வளர்ந்தார் யாரும் மிதித்த இடமெல்லாம் ஸத்யமும் தர்மமும் வளர்ந்தோங்கவேண்டும். அற வோர் அன்புவைக்குமாறும், மறவோர் மனமழியுமாறும் சீலமும் வீரமும் சிறந்துவிளங்கும் சேனைத்தலைவர் நீராதலின், அறமுயர் நெறியிலாற்றலைநிறுவி மறம்படுத்தொழித்து மநுமுறைவளர்த்துச் சீலம் பெருக்கிச் சினமொழித்தகற்றிக் கோலந்தவிர்த்துக் குடிமை கைக்கொண்டு காலந் தருவதே கையடையாகச் சீக்கிரத்தில் திரும்பிவருவீரென்று நம்புகிறேன்.

[எல்லோரும் தொழல்]

புருஷோத்தமன்:—போய்வாருங்கள். உங்களெல்லோருக்கும் மங்களமுண்டாகுக.

அங்கம்-V.

களம்-2.

இடம்:—சத்ருஜித்தின் அரண்மனையில் ஓர் அறை.

பாத்திரங்கள்:—சத்ருஜித், சித்திராங்கி.

சித்திராங்கி:—[தொழுது] அப்பா! நானும் வரத்தான் வருவேன். என்னை நீங்கள் அழைத்துக்கொண்டுபோகத்தான்வேண்டும்.

சத்ருஜித்.—குழந்தாய்! பருவமடைந்த இளம்பெண்ணாகிய நீ யுத்தஸந்நத்தனாகப்போகும் என்னோடு வருதல் தகுதியா? போர் முனையில் நடப்பவற்றை நீ கண்டால் உன்மனங் கலங்காதா?

சித்திராங்கி:—தங்கள் வயிற்றிற் பிறந்த என் மனம் எதற்கும் கலங்குமா? விளையாட்டுக்குழந்தையாகவே அரிய பெரிய பல போர்களையும் உடனிருந்து பார்த்திருக்கிறேனே!

சத்ருஜித்:—அப்பொழுதெல்லாம் உனக்கு நினைவுதெரியுமா? அச்சமுண்டா? குழந்தை. இப்பொழுது அப்படியா? நினைவு தெரிந்துவிட்டால் ஸ்திரீகள் கொடியகாரியங்களைப்பார்த்தல் தகுதியன்று.

சித்திராங்கி:—ஏனப்பா! நேற்று நீங்கள் அம்மாவோடு பேசிக் கொண்டிருந்தபோது நிர்மலகுப்தர் முன்னால் போய்க்கொண்டிருப்பார். சந்திரர் பின்னால் போவார். அவர்கள் அதிதியாகத் தாங்கள் கூடப்போவதைத்தவிர வேறு யாதொரு விசேஷமும் இல்லையென்றீர்களே. அப்படியானால் தானும் கூடவருவதாகத் தானுபதிகளோடு அம்மாகூடப் பேசிக்கொண்டிருந்தாளே.

சத்ருஜித்:—அது உண்மைதான். ஆனால் நாங்கள் எதிர்பாராதபடி எங்கேயாவது தடை நேர்ந்தால் எங்கள்வீரத்தைக் காட்ட நேரும். நாங்கள் முன்னேறாமல் பின்னிடுகின்றவர்களா?

சித்திராங்கி:—உங்களுக்குத்தான் வெற்றி நிச்சயமாயிற்றே. நாங்கள் வருவதில் என்னதடை? அம்மாவும் வருகிறாள். எல்லோரும் போவோம்.

சத்ருஜித்:—ஆமாம்! உனக்குமாத்திரந்தானே உடன்வர அனுமதிகேட்டாய்! இதென்ன? அம்மாசெய்த யுக்தியோ?

சித்திராங்கி:—நீங்கள் அம்மாவைவிட்டுப்போவீர்களா? நான் குழந்தையாயிற்றே! ஏமாற்றிவிடலாமென்று பார்த்தீர்களோ!

சத்ருஜித்:—எல்லாரும் வாருங்கள். நாம் மங்களகரமாகத் தானே போகிறோம். யுத்தத்துக்கல்லவே.

அங்கம்-V.

களம்-3.

ஒருதளகர்த்தன்:–[பாடலீபுரத்துக் கோட்டைக்குவெளியில் உருவிய வாளுடனும் துடிக்கும் வீசையுடனும்] கடமையென்றாலென்ன? அரசன் அங்கக்காப்புப்படைக்கு நான் தளகர்த்தன். நேபாளஞ்செகுத்த நிர்மலகுப்தரின் சிஷ்யன். இந்த வாள், நான் இப்பதவியடையும் போது அரசர் அங்கத்தை என்னுயிருள்ளவரை காப்பேனென்று ஆணையிட்டுப் பெற்றது. அவரைக் காப்பதற்கன்றி நானில்லை. போர்முகத்தில் குருவும் விரோதிதான். இப்பொழுது நம்மரசனை எல்லோரும் கைவிட்டார்கள். கொடுங்கோன்மன்னனென்றா லென்ன? கோலைச்செலுத்தல் அவன் காரியம். நம் கடமையைச் செலுத்தல் நம் காரியம். சுத்தவீரனுக்குத் தன் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுவதைத்தவிர வேறு செய்யத்தக்கதில்லையே. இது நம் குருவாகிய குப்தர் கற்றுவைத்த பாடமன்றோ? இனி யோசிக்க லாகாது. உடனே போர்முகத்துச்சென்று என்னுயிருள்ளவரை கடமையைச் செலுத்தவேண்டும். வீரனுக்கு உயிர்துறத்தலே வெற்றி. (போதல்)

அங்கம்-V.

களம்-4.

பாத்திரங்கள்:—இரண்டுவீரர்கள்.

முதல்வீரன்:–தம்பி! நம் நாட்டுக்குவந்தது நல்லதா? தீயதா?

இரண்டாம்வீரன்:—நன்மை தீமை நமக்கென்ன தெரியும்?

முதல்வீரன்:—நம் நாட்டிலும் மாற்றரசர்சேனை புகுமா?

இரண்டாம்வீரன்:—புகுந்ததுமட்டுமேயொழியப் பொருத தெல்லாம் நம் சேனைகள்தானே?

முதல்வீரன்:—நிர்மலகுப்தர் நடத்திவந்தது பாஞ்சாலர்சேனை யன்றோ?

இரண்டாம்வீரன்:—நம் குறுநிலமன்னர்சேனைகளல்லவா?

முதல்வீரன்: — பாஞ்சாலர்தளகர்த்தர், சந்திரர்: இவர்களுடைய படைகள் பொருகளம் காணவேயில்லையோ?

இரண்டாம்வீரன்:—நம்மரசர் சந்திரனைச் சிறைபிடிக்கவேண்டு மென்று மெய்காப்புச்சேனையுடன் சென்று சந்திரன் படையை மோதினர். பாஞ்சாலர்சேனை பலத்த போர்புரிய இவர்கள் யாரு மின்றி மாண்டனர். தன்தலை விழும்வரை மன்தலை காத்துத் தள கர்த்தரும் விழுந்தார். அடுத்து அரசனும் விழுந்தான். அச் சேனை கலையவே மற்றுள்ள நம்மெல்லாச் சேனைகளும் கூக்குர விட்டுச் சிதறின.

முதல்வீரன்:—முதலிற் போர்தொடங்கின நிர்மலகுப்தர் சேனை யைத் தொலைத்துவிட்டுப் பிறகு நம்மரசர் சந்திரர்மேற் செல்லக் கூடாதா? சும்மா இருந்தவர்களை இவர்போய் ஏன் வம்புக்கிழுக் கிறார்?

இரண்டாம்வீரன்:—மாற்றரசர்சேனை நம்நாடுபுகக் கண்டு நம் மரசர் மனம் சகிப்பாரா?

முதல்வீரன்:—திசைகாவலரும் குறுநிலமன்னரும் மற்றெல் லோரும் தனக்கு விரோதமாய்விட்டதால் இனி உயிர்வாழ்வதில்லை யென்று நம் மன்னர் துணிந்துவிட்டார்போலும்.

11

சித்திராங்கியும் சாகரனும்:—(யமுனையைத் தொழல்.)

யமுனை:—தீர்க்காயுசாய் நித்தியமங்களமாய் இருவரும் வாழக் கடவீர்கள். [சாகரனைநோக்கி] குழந்தாய்! உனக்குப் பதவியும் பாரியும் ஒருங்கேவாய்த்தது இறைவனருளப்பா!

சாகரன்:—அம்மா! தங்கள் பாதம் தந்த பாக்கியம். இதன் மேலும் எனக்கென்னவேண்டுமானாலும் அது தராதோ?

சந்திரன் கொலுவிருக்கை

பட்டாபிஷேகம்.

நிர்மலகுப்தர், தர்மசீலர், சத்ருஜித், சாணக்கியர் முதலாயினோர் ஆசிகூறல்.

கட்டியம்:—ராஜாதிராஜ ராஜசேகர ராஜமார்த்தாண்ட ராஜவல்லப ஸ்ரீரவிகுலதிலக சந்திரசக்ரவர்த்தியவர்கள் மறையவரேத்த மன்னவர்போற்ற—ஸுலோசனைப்பெருந்தேவியாருடன் அரியாஸனத்தேறி மணிமுடிபுனைந்தனர். அவருடைய வுயிர்நண்பரான சாகரர் தளகர்த்தராயினர். அவர், மந்திரப்பெரியாரும் வரன்முறைப் பெரியாரும் தத்தம் பெற்றியில் நிலைபெறவும் அறமும் திறமும் வளமும் நலமும் அகலிடமெங்கும் புகலிடமாகவும் நீடூழி நாடு காத்து வாழ்க! வாழ்க! வாழ்க!

வாழ்க நல்லறம் வாழியர் அந்தணர்
வாழ்க ஆனினம் வாழிய தண்புனல்
வாழ்க மன்னவன் வையக மோங்குக
தாழ்க வல்லவை தாவில நாடரோ.

ஸுபஹூஸு.